இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 119 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 23 – செவ்வாய்க்கிழமை 09 டிசம்பர் 2025 – கோவை★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 119: Thiruvalluvar Year - 2056 - Karthigai 23 - Tuesday 09 December 2025 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## கோவா தீ விபத்து: விசாரணை தேவை! கார்கே வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 9 -

வடக்கு கோவாவின் அர்போராவில் இரவு விடுதி ஒன்றில் சனிக்கிழமை இரவு ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 25 பேர் உயிரிழந்த நிலையில், இதுகுறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கோவாவின் அர்போராவில் ஏற்பட்ட துயரகரமான தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல். இந்த துயர சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

## சென்னை ஜி.எஸ்.டி. ஆணையர் அலுவலகத்தில் தீ விபத்து!

சென்னை, டிச. 9 -

சென்னை அண்ணா நகர் பகுதியில் உள்ள ஜி.எஸ்.டி. ஆணையரக அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் 6 வண்டிகளில் வந்து தீயணைப்புப் படையினர், சுமார் 2.30 மணி நேரம் தீவிரமாகப் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதனால் அப்பகுதி முழுவதுமே கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது. ஜி.எஸ்.டி. ஆணையரக அலுவலகத்தின் தரை தளத்தில் உள்ள கேண்டீனில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரை மாவட்டம், உத்தங்குடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், 2,630 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவிலான 63 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 17 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 7 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், மாணிக்கம் தாகூர், தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, வெங்கடேசன், பூமிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சில அரசியல் கட்சிகள் கலவரத்தைத் தூண்ட மலிவான அரசியல் செய்கிறார்கள்!

# எத்தனை சூழ்ச்சிகளானாலும் எதிர்கொண்டு முறியடிப்போம்!

## மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**மதுரை, டிச, 9-**

**"சில அரசியல் கட்சிகள் கலவரத்தைத் தூண்ட மலிவான அரசியல் செய்கிறார்கள். எத்தனை சூழ்ச்சிகள் செய்தாலும் அத்தனையையும் எதிர்கொண்டு முறியடிப்போம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றும்போது சூளுரை மேற்கொண்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மண்; வீரமிக்க பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த மண்; முக்கியமாக, ஆராய்ந்திடாமல் அவசர அவசரமாக தவறான தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து, நீதி கேட்டு கண்ணகி முழங்கிய மண்! திருச்செந்தூர் முருகனின் வேலுக்காக தலைவர் கலைஞர் நீதி கேட்டு, நெடும் பயணம் தொடங்கிய மண், இந்த மதுரை மண்!

மதுரைக்காரர்கள் என்றாலே, பாசக்காரர்களாக இருப்பார்கள்! அப்படிப்பட்ட உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்!

இந்த மாமதுரைக்கு வளர்ச்சி என்றாலே, அது தி.மு.க. ஆட்சியில் தான் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும்! ஆனால், கடந்த கால கழக ஆட்சிகளில் மதுரைக்காக நாம் என்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்!

### கழக அரசால் வளர்த்தெடுக்கப்பட்ட மதுரை!

சுப்பிரமணியபுரத்தில், 'மதுரை முத்து மேம்பாலம்' ஆண்டாள்புரம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பாலம் மதுரை தெற்குவாசல் தியாகி என்.எம்.ஆர்.சுப்புராமன் மேம்பாலம் மானம் காத்த மருதுபாண்டியருக்கு சிலை பரிதிமாற் கலைஞருக்கு மணிமண்டபம்! 'திராவிட மொழி நூல் ஞாயிறு' தேவநேய பாவாணருக்கு மணிமண்டபம்! மதுரா கோட்ஸ் மேம்பாலம்! யானைக்கல் வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம்! வைகை ஆற்றின் குறுக்கே மூன்று தரைப் பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்! தத்தனேரி இருப்புப்பாதை உயர்மட்ட மேம்பாலம்! மதுரை வடபகுதி ரிங்ரோடு! மாட்டுத்தாவணியில், ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்! வணிக வளாகம்! பூ மார்க்கெட்! சென்ட்ரல் மார்க்கெட்! எல்லீஸ் நகர் மேம்பாலம்! இரண்டு பாலிடெக்னிக்குகள்! வைகை இரண்டாம் குடிநீர்த் திட்டம்! காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்! வாடிப்பட்டி கைத்தறி ஜவுளி பூங்கா! மதுரை மாவட்ட நீதிமன்றம்! சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளைக்கு அடித்தளம்! இப்படி, கழக அரசால் வளர்த்தெடுக்கப்பட்ட மதுரையை, அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்லும் நிகழ்ச்சிதான் இந்த அரசு நிகழ்ச்சி!

பெரும் சாதனையாக, நம்முடைய ஆட்சித் தலைவர் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்; ஒரு இலட்சம் நபர்களுக்கு பட்டா வழங்க இருக்கிறோம்! முல்லைப் பெரியார் குடிநீர் திட்டமாக, 2 இலட்சத்து 58 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதை தொடங்கி வைத்திருக்கிறேன். இதுவரை நாம் நடத்தி இருக்கக்கூடிய நிகழ்ச்சிகளில் ஒரு மிகப் பெரிய அரசு விழா இந்த விழா தான்!

### அமைச்சர் மூர்த்தியின் திறனை பார்த்து வியந்து நிற்கிறேன்!

அதற்காக அமைச்சர் மூர்த்தியின் பிரம்மாண்ட ஏற்பாட்டுத் திறனை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்; நான் வியந்து நிற்கிறேன்! சித்திரை திருவிழாவில் தான் மதுரையே குலுங்குகின்ற அளவுக்கு கூட்டம் கூடும்! அதுபோல, இங்கே ஒரு அரசு திருவிழாவையே, நம்முடைய அமைச்சர் மூர்த்தி ஏற்பாடு செய்திருக்கிறார்.

தன்னுடைய துறைகள் மூலமாக, தமிழ்நாட்டு கருவூலத்திற்கு மிகப்பெரிய வருமானத்தை ஈட்டித் தந்து நல்ல பெயர் பெற்ற மூர்த்தி, இன்றைக்கு இது அரசு விழாவா! அல்லது மாநாடா! என்று சொல்லக்கூடிய வகையில் மதுரை மக்களிடமும் நல்ல பெயர் பெற்றிருக்கிறார். அவருடைய பணிகள் தொடர்ந்து சிறக்க என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### மதுரை, மேலமடை சந்திப்பில் ரூ.150 கோடி செலவில் பிரமாண்டமான

# வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்!



## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மதுரை, டிச. 9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரை மாவட்டம், சிவகங்கை சாலை மேலமடை சந்திப்பு பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

மதுரை - தொண்டி சாலை (SH 33) மதுரை மாவட்டத்தில் உள்ள முக்கிய மான மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையானது மதுரை மாநகரிலிருந்து சிவகங்கை செல்வதற்கும் மதுரை வட்டச்சாலையை அணுகுவதற்கும் பயன்படுவதால் மேலமடை சந்திப்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

### போக்குவரத்து நெரிசல் தீரும்!

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பல்வேறு இடங்களில் சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 21.1.2022 அன்று மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி மதுரை - தொண்டி சாலையில் உள்ள மேலமடை சந்திப்பில் சாலை மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும், மிகவும் நெரிசல் மிகுந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆவின் மற்றும் மேலமடை சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னலை அப்புறப்படுத்தி அப்பகுதியினை அகலப்படுத்தி வட்ட வடிவ சந்திப்பு அமைப்பதற்கும் 150.28 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகளுக்கு 30.10.2023 அன்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

### பயண நேரம் குறையும்!

அதன் தொடர்ச்சியாக, மதுரை மாவட்டம், மேலமடை சந்திப்பில் 950 மீட்டர் நீளத்திற்கு நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் கட்டப்பட்டு, மேலமடை சந்திப்பு, ஆவின் சந்திப்பு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு ஆகிய 3 சந்திப்புகளிலும் ரவுண்டானாவுடன் கூடிய சாலை சந்திப்பு மேம்பாடு செய்யப்பட்டு, பாலத்தின் இருபுறமும் தலா 7.50 மீட்டர் அகலமுள்ள 2 வழித்தடச் சேவைச் சாலைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு முதல் மேம்பாலம் வரை தலா 7.5 மீட்டர் அகலமுள்ள நான்கு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2025) மதுரை மாவட்டம், சிவகங்கை சாலை மேலமடை சந்திப்பு பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

1044

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

92

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## சமதர்ம ஆட்சியே திராவிட இலக்கு!

**10.02.1946** அன்று தென்சென்னை திராவிடர் கழக மாநாடு மயிலாப்பூர் கபாலி டாக்கீசில் நடைபெற்றது. அன்று காலை 7 மணியில் இருந்தே மயிலாப்பூர் நோக்கி வரும் பேருந்துகளில் கருப்புச் சட்டை அணிந்தவர்களாக இருந்தனர். பலர் கருப்புத்துணி கிடைக்காமல் கருப்பு பேட்ஜ் அணிந்துகொண்டு வருகை தந்தனர். சென்னை ஜில்லா கருஞ்சட்டைப் படை கேப்டன் சி.கணேசன், உதவி கேப்டன் எஸ்.ஆர். சாண்டோ உட்பட 500-க்கும் மேற்பட்ட கருஞ்சட்டைப்படை வீரர்கள் இருபுறமும் அணிவகுக்க, பெரியார் மாநாட்டுக் கொட்டகைகளுக்குள் நுழைந்த காட்சியே பிரமாண்டமாக இருந்தது. அப்போது, கருஞ்சட்டைப் படை தொண்டர்களுடன் பெரியார், அண்ணா, முத்தையா முதலியார், சி.டி.டி.அரசு முதலானோர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

ஏ.பி.ஜனார்த்தனம் கொடியேற்றி, திராவிட இயக்கத்தின் அவசியம் குறித்து விளக்கிப் பேசினார். சென்னை ஜில்லா துணைத் தலைவர் கே.பி.பெருமாள் மாநாட்டை திறந்து வைத்து, இயக்கத்தின் எதிர்காலம் குறித்து உரையாற்றினார். ஆர்.சம்பந்தம் வரவேற்புரையாற்றிய பின்னர், சி.டி.டி.அரசு மாநாட்டுக்குத் தலைமையேற்றார்.

“வெள்ளையர்கள் இந்தியாவுக்கு விடுதலை கொடுக்கும் நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் இனத்தாராகிய ஆரியர்களிடம்தான் இந்த நாட்டை ஒப்படைப்பார்கள். ஆகவே, நம்முடைய நிலைமை அப்போது எப்படி இருக்கும் என்பதை எண்ணி இப்போதே நீங்கள் புறப்பட வேண்டும். ஆரிய - ஆங்கிலேய ஒப்பந்தத்தை உடைக்க, ஆரியத்தை வீழ்த்த நம் திராவிட நாட்டுத் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமையில் புறப்படுங்கள். அந்தத் திராவிடத்திலே முதலாளி, தொழிலாளி வித்தியாசம் இருக்காது. சனாதனம் சுக்கல் சுக்கலாக ஒடித்து எறியப்படும். மனுநீதி மண்ணின் கீழ் போட்டு புதைக்கப்படும். சுருங்கச் சொன்னால் சமதர்ம ஆட்சி நடைபெறும் நம் திராவிடத்திலே” என எழுச்சி உரையாற்றினார் சி.டி.டி.அரசு.

திராவிடர் கழகத்தின் அவசியம் குறித்து முத்தையா முதலியார் பேச, இயக்கத்தின் லட்சியம், ஆற்றிவரும் பணிகள் குறித்து 2 மணி நேரத்துக்கு மேல் பேசினார் பெரியார். தியாகராய நகரில் ஒரு பகுதியை இந்துஸ்தானி நகர் என்று மாற்ற சிலரால் மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிக்கு கண்டனம் உட்பட 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்துஸ்தானி நகர் கண்டன தீர்மானம் குறித்து அண்ணா, பேராசிரியர் அன்பழகன் உரையாற்றினர். பின்னர், முத்தையா முதலியார் இல்லத்தில் பெரியார் உள்ளிட்ட தலைவர்களுக்கு மதிய உணவு விருந்தளிக்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு மந்தைவெளியில் இருந்து பிரமாண்ட பேரணி நடைபெற்றது. ஊர்வலத்தின் முன்பாக அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது கருஞ்சட்டைப் படைத்தொண்டர் அமர்ந்து கொடியை ஏந்தி வந்தார். பின்னால் பாண்டு வாத்தியம் முழங்க 1,000 கருஞ்சட்டைப் படை தொண்டர்கள் மிடுக்கோடு அணி வகுத்து வந்தனர். கருஞ்சட்டைப் படை தொண்டர்களுக்குப் பின்னால் பெரியாரும் சி.டி.டி. அரசும் காரில் அமர்ந்து வந்தனர். அதற்குப் பின்னால் சுமார் 5,000 தொண்டர்கள் கொள்கை முழக்கங்களை எழுப்பியவாறு அணிவகுத்தனர். வழியெங்கும் பெரியாருக்கு மாலைகள் சூட்டி, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலை 7 மணிக்கு பொது மாநாடு நடைபெறவிருந்த மயிலாப்பூர் கடற்கரைக்கு ஊர்வலம் வந்து சேர்ந்தது. 15,000-க்கும் மேற்பட்டோர் திரள, கடற்கரையில் பிரமாண்டமாகத் தொடங்கியது பொது மாநாடு. எம்.சொக்கலிங்கம் கடற்கரை கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அண்ணாவின் நோக்கவுரைக்குப் பிறகு, இரண்டரை மணி நேரம் ஓயாத கடல் அலையொலிக்கு மத்தியில், இன இழிவு நீக்க எழுச்சியுரை நிகழ்த்தினார் பெரியார்.

**...கூட்டம் திரளும்**

## ‘சர்வே கல்’ எப்படி தீபத் தூணாகும்?

திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீப விழாவையொட்டி வழக்கமாகத் தீபம் ஏற்றப்படும் இடத்தில், கோயில் நிர்வாகம் தரப்பில் தீபம் ஏற்றப்பட்டுவிட்டது. ஆனால், மலைமீது உள்ள சிக்கந்தர் பாஷா தர்காவுக்கு அருகில் தீபம் ஏற்ற வேண்டுமென்று, குழப்பம் ஏற்படுத்த முயன்று, அது தேசிய அளவிலான விவாதமானது. அயோத்தியைப் போல திருப்பரங்குன்றத்தை மாற்ற அனுமதிக்க மாட்டோம் என்று, சங்கிக் கும்பலின் மதக் கலவர முயற்சியை உறுதியோடு தடுத்து நிறுத்தியுள்ளது தமிழ்நாடு அரசு. இந்துத்துவவாதிகளின் இத்தகைய செயல்களால் மத நல்லிணக்கத்தைப் பேணும் தமிழ்நாட்டு மக்களிடமிருந்து மேலும் மேலும் தனிமைப்பட்டுப்போவதுடன், உள்ளூர் வியாபாரிகளின் கடும் எதிர்ப்புகளையும் பெற்றிருக்கின்றனர்.

இந்துத்துவவாதிகள் தீபம் ஏற்ற கேட்கும் இடம் தீபத்தூணே அல்ல, அது சர்வே கல் என்று உள்ளூர் மக்களும், தொல்லியல் அறிஞர்களும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளனர். இதுதொடர்பாக ஆதாரங்களும் சமூக வலைதளங்களில் பலரால் பகிரப்பட்டுள்ளன. அந்த ஆவணத்தைப் பகிர்ந்துள்ள சிவக்குமார் என்பவர், “தர்காவுக்கு வட மேற்கில் 50 யார்டு தொலைவில் ஒரு சர்வே கல் உள்ளது. அந்த சர்வே கல்லுக்கு தென் கிழக்கில் 53 யார்டு தொலைவில், அதாவது, தர்காவுக்கு மிக அருகில் மற்றொரு சர்வே கல் உள்ளது.

அதுமட்டுமல்ல, இந்த சர்வே கற்கள் இருக்கும் பகுதியானது சிக்கந்தர் மலை என்றே தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கார்த்திகை தீபத்தை வழக்கமாக ஏற்றும் இடத்தில் ஏற்றுவதே சரி. அதை விடுத்து, தனி மனித விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையில் நீதிபதிகளின் துணையோடு, நீதிமன்றங்களை குழப்பி, மக்களிடையே பதற்றத்தை உருவாக்கி, மதக்கலவரங்களுக்கு வித்திடும் வகையில் சிக்கந்தர் தர்கா இருக்கும் மலைப்பகுதியில்தான் விளக்கேற்ற வேண்டும் என்று சொல்வது அநீதி, அக்கிரமம், அழிச்சாட்டியம், அற்பத்தனம்” என அவர் பதிவிட்டுள்ளார்.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

92

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தாய்தெய்வ வழிபாடும் தமிழ்நாடும்...

திருப்பரங்குன்றத்தில் பொது அமைதிக்கு ஊறு விளைவிக்க முயன்றவர்களை, மிக உறுதியாக தடுத்து நிறுத்தி இருக்கிறது, தமிழ்நாடு அரசு. அங்குள்ள மக்களும் போலி கோஷங்களுக்குப் பின்னால் நிற்காமல் மத நல்லிணக்கத்தை நிலைநிறுத்தும் வண்ணம் செயல்பட்டுள்ளனர். ஒருவகையில், இது தமிழ்நாட்டில் மட்டுமே நிகழக்கூடிய விநோதம். காவிகளின் மக்கள் விரோத அரசியலுக்கு தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை, மக்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர்.

இங்குள்ள பொது மக்கள் இத்தனை ஜனநாயகப் பண்புடன் விளங்க அடிப்படையாக இருப்பது, நிறுவனமயப்படாத தாய்தெய்வ வழிபாடுதான் என்கிறார் பண்பாட்டு ஆய்வாளர் தொ.பரமசிவன். ‘சமயம்: ஓர் உரையாடல்’ எனும் தலைப்பில் முனைவர் சுந்தர் காளியுடன் தொ.ப. மேற்கொண்ட உரையாடல் நூல் வடிவம் பெற்றுள்ளது. தமிழ் சமூகம் சமயத்தையும், தெய்வத்தையும் காலந்தோறும் எவ்வாறு அணுகி வந்துள்ளது என்பதை அறிய விரும்பும் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது. அன்னம் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது




‘கடவுளும் சமயமும் பண்பாட்டு விழாதான் கார்த்திகை தீபம் என்று மிக இயல்பாக இந்நூலில் தொ.ப. வெளிப்படுத்தும் சில கருத்துக்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன. நிறுவனமயப்பட்ட மதங்கள்-தலங்கள்- பெருங்கோவில்கள் அனைத்துமே அதிகாரத்தை முதன்மைப்படுத்தும் சர்வாதிகாரத்தன்மை கொண்டவையாக விளங்குவதை எடுத்துரைக்கும் அவர், மக்களிடம் புழங்கும் ஜனநாயக வழிபாட்டுக் கூறுகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

இல்லாத உலகைக் கற்பனை செய்ய முடியுமா?’ என்ற கேள்வியில் தொடங்கும் இந்த உரையாடல் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு நீள்கிறது. மேற்கத்திய நவீனத்துவம் அங்குள்ள மக்கள் மீது நிகழ்த்திய எதிர்மறையான தாக்கத்தை எடுத்துக்கூறி, அதிலிருந்து தமிழ்நாட்டில் காலனியம் மூலம் கடத்தப்பட்ட நவீனத்துவம் வேறுபடும் சில முக்கியமான புள்ளிகளை இந்நூல் விவாதிக்கிறது.

சங்ககாலம் முதல் காலனிய காலத்தின் தொடக்கப் பகுதி வரை இங்கு சமயம் சமூகத்தின் மீதும், சமூகம் சமயத்தின் மீதும் ஏற்படுத்திய செல்வாக்கை காலவரிசையில் இந்நூலில் வாசிக்க முடிகிறது. இருவரும் விவாதிக்கும் வடிவில், இந்த உரையாடல் அமைந்திருப்பதால் வாசிப்பு சலிப்பின்றி சுவாரசியமாகவும் இருக்கிறது.

மழையை வழியனுப்ப, தமிழர்கள் எடுத்த அம்மன் வழிபாடு, முருகன் வழிபாடு, ஆசீவகம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சித்தர் மரபு, கிறிஸ்துவம், இஸ்லாம் என தமிழ் சமூகத்தில் புழக்கத்தில் இருந்த- இன்றளவும் இருக்கின்ற சமயங்கள் குறித்த அறிமுகத்தையும் அவை ஒன்றுக்கொன்று மேற்கொண்ட ஊடாட்டத்தையும் இந்த உரையாடல் கவனப்படுத்துகிறது.

தமிழ் மக்களின் சமய நம்பிக்கைகள், எதன் மீது எழுப்பப்பட்டுள்ளன? இன்றுவரை இச்சமூகம் மதவாதத்திற்கு அடிபணியாமல் விளங்கக் காரணமாக இருப்பது என்ன? இங்குள்ள சமயங்களில் அறிவு நெறிக்கும் அன்பு நெறிக்கும் அளிக்கப்படும் இடமென்ன என்பதையெல்லாம் மிகவும் எளிமையான வகையில், வாசகருக்கு கடத்துகிறது இந்த உரையாடல்.

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்


ஆர்.பிரவீன்குமார்



## தலைவருடன் படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு!

2015-ஆம் ஆண்டு வாக்கில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. கட்சிப் பணிகளில் தொடக்க காலத்தில் தலைவரை சந்திக்க வாய்ப்பு அமைந்து எடுத்துக் கொண்ட படம் என்பதால், இந்தப் படம் எனது வாழ்நாளில் மறக்க முடியாது.

**– ஆர்.பிரவீன்குமார், பகுதி அமைப்பாளர், பொறியாளர் அணி, அண்ணா நகர் தெற்கு பகுதி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## மாநில கட்சி அங்கீகாரம்!

1957-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாநிலத்தில் பதிவான மொத்த வாக்குகளில் 10.56 சதவிகித வாக்குகளை தி.மு.க பெற்றது. இந்த வாக்கு விகிதத்தை தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து, கணக்கிட்டு மாநில கட்சியாக அங்கீகாரம் செய்தது. முதல் தேர்தலிலேயே மாநிலக் கட்சி அங்கீகாரத்தைப் பெற்றது தி.மு.கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131